பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 627 **நாள்: 29.10.2026**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வடகிழக்குப் பருவமழை மற்றும் பேரிடர் காலங்களில், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் தன்னார்வ அமைப்புகள் (NGOs), குடியிருப்பு நலச் சங்கங்கள் (RWAs), நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) மற்றும் தேசிய மாணவர் படை (NCC) உள்ளிட்ட தன்னார்வலர்கள் இணைந்து பணியாற்றுவதற்கான தன்னார்வலர்கள் ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இன்று (29.10.2026) மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வடகிழக்குப் பருவமழை மற்றும் பேரிடர் காலங்களில், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் தன்னார்வ அமைப்புகள் (NGOs), குடியிருப்பு நலச் சங்கங்கள் (RWAs), நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) மற்றும் தேசிய மாணவர் படை (NCC) உள்ளிட்ட தன்னார்வலர்கள் இணைந்து பணியாற்றுவதற்கான தன்னார்வலர்கள் ஒருங்கிணைப்புக் கூட்டம் ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் பேசும்போது தெரிவித்ததாவது:

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை மற்றும் எல்நினோவினை முன்னிட்டு, தேவையான அனைத்து முன்னெச்சரிக்கைப் பணிகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. பேரிடர் மேலாண்மைப் பணிகளில் தன்னார்வலர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தன்னார்வலர்களின் பங்களிப்பினை பயன்படுத்திக் கொள்ளும் வகையில், மேம்படுத்தப்பட்ட நம்ம சென்னை செயலி வாயிலாக தன்னார்வலர்கள் பதிவு செய்யும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு இதுவரை 7,340 தன்னார்வலர்கள் பதிவு செய்துள்ளனர். ஒவ்வொரு தன்னார்வலர்களும் தங்களது விருப்பத்தின் அடிப்படையில் களப் பணிகள், மருத்துவ சேவைகள், மீட்பு நடவடிக்கைகள், உணவு வழங்கும் பணிகள், தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகள் உள்ளிட்ட சேவைகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தன்னார்வலர்களுக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மண்டல அளவில் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் தன்னார்வலர்கள் ஆர்வமாக பங்கேற்பது பாராட்டுக்குரியது. இந்நிலையில், மாநகராட்சியின் ரிப்பன் கட்டட

அலுவலக வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் இன்று 300க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பங்கேற்று, பேரிடர் மேலாண்மைப் பணிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் ஒருங்கிணைந்து தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுதல், தங்களது முழு விவரங்களை வழங்கி, தன்னார்வலர்கள் விரும்பும் சேவைகளை வழங்குதல் குறித்து ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்படுகிறது.

பெருமழை மற்றும் பேரிடர் காலங்களில் தன்னார்வலர்கள் மண்டல வாரியாகவும், ஒவ்வொரு வார்டு வாரியாகவும், ஒவ்வொரு தெருக்கள் வாரியாகவும் முன்கூட்டியே ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படையில் அந்தந்த அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும். ஒவ்வொரு குடியிருப்புப் பகுதிகளிலும் வசிப்பவர்களின் விவரம், குறிப்பாக கர்பணித் தாய்மார்கள், குழந்தைகள், முதியவர்கள், மருத்துவ உதவி தேவைப்படும் மக்கள், அருகில் உள்ள மருத்துவமனை, தீயணைப்புத் துறை, காவல் துறை, மாநகராட்சி மீட்பு மையங்கள், சமையல் கூடங்கள், குடிநீர் விநியோகம், பால் விநியோகம், சேவைத் துறை அலுவலர்களின் தொடர்பு கொள்ளுதல், தலைமையிடத்தில் உள்ள ஒருங்கிணைந்து கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் மற்றும் அதன் தொலைபேசி எண் 1913 என்கிற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவித்தல், 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் உள்ள கட்டுப்பாட்டு மையங்களின் தொடர்பு எண்கள் உள்ளிட்ட அனைத்து தொடர்பு அலுவலர்களின் தொலைபேசி எண்களை அறிந்து கொண்டு தகவல் தெரிவித்தல் மற்றும் நடவடிக்கை மேற்கொள்ளுதல் உள்ளிட்டவற்றை ஒவ்வொரு பகுதிக்குமான மாநகராட்சியின் பொறுப்பு அலுவலர்களுடன் இணைந்து சேவையாற்றிட வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., தமிழ்நாடு தன்னார்வலர் அமைப்பின் (Tamilnadu Volunteers) நிறுவனர் திரு. ஹரிகிருஷ்ணன், தன்னார்வலர்கள் ஒருங்கிணைப்பாளர் திருமதி கிறிஸ்டி லீமா, ஆகியோர் தன்னார்வலர்களின் சேவை மற்றும் ஒருங்கிணைப்பு குறித்து எடுத்துரைத்தனர். தலைமைப் பொறியாளர்கள் திரு.பி.சங்கரவேலு, திரு.டி.ஞானவேல், மேற்பார்வைப் பொறியாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.